DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **அழகு நித்யா** |
| Father's Name | : | சௌந்தரபாண்டியன் |
| Village | : | செல்லப்பனேந்தல் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | விவசாயம் (100 நாள்) |
| Age | : | 34/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 13.05.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது செல்லப்பனேந்தலில் குடியிருந்து 100 நாள் வேலை திட்டத்தில் நான் வேலை பார்க்கிறேன். அ.சா.1 கடம்பவள்ளி எனது அக்கா. சூரவள்ளி எனது பக்கத்து வீட்டுக்காரர். வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் அவர் எனது அக்கா கடம்பவள்ளியின் கணவர் ஆவார். எனது அக்காவிற்கும் எதிரிக்கும் இடையே சுமார் 20 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்பு எனது அக்காவிற்கும் எதிரிக்கும் இடையே அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு கடந்த 6, 7 வருடங்களாக அவர்கள் இருவரும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்கிறார்கள். ஏற்கனவே எதிரி மீது எனது அக்காவை அடித்தது தொடர்பாக இரண்டு வழக்குகள் கொடுத்திருந்தோம். அதே போல் விவாகரத்து கேட்டு எனது அக்கா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. முதலாவதாக விவாகரத்து கேட்ட வழக்கு போடப்பட்டு அதில் எதிரி இனிமேல்

பிரச்சினை செய்யமாட்டேன் என்பதன் பேரில் கைவிடப்பட்டது. எனது அக்கா எதிரியை பிரிந்த பின்பு செல்லப்பனேந்தலில் உள்ள எனது அப்பா வீட்டில் குடியிருந்து வந்தார். கீழ் தளத்தில் எனது பெற்றோர் குடியிருந்து வருகிறார். நான் எனது பெற்றோர் வீட்டிற்கு எதிரே குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு எனது அக்கா மகனை பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்கள் அடித்து காயம் காரணமாக அவரை மதுரை அரசு மருத்துவமனையில் சிசிச்சைக்காக சேர்த்திருந்தோம். எனது அக்காவும் அவரது மகனும் காவல்நிலையத்தில் இருந்தபோது எதிரி எனது அக்காவிற்கு போன் செய்து அவர் அதை எடுக்கவில்லை. அதன்பிறகு எதிரி ஊருக்குள் பைக்கில் வந்து எனது அக்கா மகனை விரட்டினார். நான் எனதுவீட்டில் படுத்திருந்தபோது என் அக்கா மகனை கேட்டபோது எதிரி தன்னை பைக்கில் விரட்டிவந்ததாக சொன்னார். அதன்பிறகு எனது அக்காவும், மகனும் வீட்டின் மாடியில் இருந்தோம். அன்றைய தினமான 23.06.2024 அன்று மதியம் 3.00 மணியளவில் எனது அம்மா வீட்டின் வாசலில் தலையை துவட்டிக்கொண்டிருந்தார். நான் எனது அம்மாவின் சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தபோது எனது அம்மாவை எதிரி இரண்டு வெட்டுக்கள் அருவாளால் தலையின் தோள்பட்டையில் வெட்டினார். நான் எனது அம்மாவை தள்ளும்போது அந்த வெட்டு எனது வலது கை கட்டை விரல் அருகே பட்டு காயம் ஏற்பட்டது மேலும் என்னை அடித்து கீழே தள்ளி இடது முன்கையில் வெட்டிவிட்டார். நானும் எனது அம்மாவும் எதிரி வைத்திருந்த அருவாளை பிடுங்குவதற்காக சண்டை போ்டுக்கொண்டிருந்தொம். அதன்பிறகு எனது அக்கா வீட்டின் மாடியிலிருந்து இறங்கி வந்தார். அப்போது எதிரி எனது அக்காவை எதிரி அருவாளால் வலது முன்கையில் வெட்டினார். அப்போது சூரவள்ளி, பிரபாகரன் ஆகியோர் வந்தார்கள். எதிரியின் கையில் அருவாள் இருந்ததால் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. மேலும் எதிரி வைத்திருந்த அருவாளை மல்லுக்கட்டி பிடு்ங்கும்போது எங்கள் வீட்டின் வாசலில் இருந்த கல் பட்டு அவரது தலையில் காயம் ஏற்பட்டது. எதிரிக்கு தலையில் காயம் ஏற்பட்டபிறகு அங்கிருந்து சென்றுவிட்டார். அதன்பிறகு எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் காயம்பட்ட எங்களை கார்

மூலமாக திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தார்கள். அதன்பிறகு வேலம்மாள் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோர். போலிசார் என்னை திருப்புவனம் அரசு மருத்துவமனையிலும் வேலம்மாள் மருத்துவமனையிலும் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

திருப்புவனம் அரசு மருத்துவமனையிலும், வேலம்மாள் மருத்துவமனையிலும் போலிசார் விசாரித்த விபரத்தை நான் போலிசாரிடம் கூறியுள்ளேன். நானும் எனது அக்கா கடம்பவள்ளியும் அவரவர் கணவரை விட்டு வாழ்ந்து வருகிறோம். எனக்கு மதுரைக்கு அருகாமையில் உள்ள கருப்பாயூரணி கல்லுமேட்டில் இடம் இருந்தது. ஆனால் அங்கு நான் குடியிருக்கவில்லை. செல்லப்பனேந்தலில் சுமார் 10 வருடத்திற்கு முன்பு நான் தனியாக வீடு வாங்கி குடியிருந்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீடு எனது பெற்றோர்களின் வீட்டிற்கு எதிரே உள்ளது. என் பெற்றோர் வீட்டிலிருந்து 4, 5 வீடுகள் மேற்கே தள்ளி அதே தெருவில் என் வீடு உள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த போது எனது அம்மாவின் சத்தம் கேட்டு என் வீட்டிலிருந்த நான் ஓடிவரவில்லை. சம்பவ சமயத்தில் எனது அப்பா வெளியூரில் வேலைக்கு சென்றுவிட்டார். ஆகவே இந்த சம்பவம் எனது அப்பாவிற்கு தெரியாது. எனதுஅக்காவிற்கும் எதிரிக்கும் இரண்டு வழக்குகள் நடந்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கடம்பவள்ளியும் எதிரியும் விவாகரத்து கேட்டு வழக்கு தொடர்ந்திருந்தார்கள் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். ஆனால் திருப்புவனம் நீதிமன்றத்தில் அவர்களுக்குள் விவாகரத்து வழக்கு நடந்ததா என்று எனக்கு தெரியாது. அவர்களுக்குள் சிவகங்கை நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது பற்றியும் நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. இந்த சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு எனது அக்கா மகனை அடித்தது சம்பந்தமாக என் அக்காவும் என் மகனும் திருப்புவனம் காவல்நிலையத்தில் இருந்தபோது எதிரி போன் செய்தவிபரத்தையோ அவர்கள் அந்த போனை எடுக்கவில்லை என்ற விபரத்தையும் போலிசாரிம் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவத்தன்று எனதுஅக்கா மகன்

ஸ்கூட்டியுல் போன விபரத்தையும் அவனை எதிரி விரட்டி சென்ற விபரத்தையும் நான் போலிசாரிடம் கூறியுள்ளேன். எனது அக்கா மகன் ஓடி வந்து தூங்கிகொண்டிருந்த என்னிடம் இந்த விபரத்தை சொன்னான் என்ற விபரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது அம்மா கீழ் தளத்தில் தலைமை துவட்டிக்கொண்டிருந்த விபரத்தை நான் போலிசாரிடம் சொன்னேன். போலிசாரின் விசாரணையில் எதிரி எனது அம்மாவை பின் தலையில் மாறி மாறி அருவாளால் வெட்டினார் என்ற விபரத்தை சொல்லியிருக்கிறேன். நானும் எனது அக்காவும் மாடியிலிருந்த இறங்கி வருவதற்கு முன்பாக எனது அம்மாவை எதிரி வெட்டிவிட்டார் என்றால் சரிதான். நாங்கள் கீழே வந்து பார்த்தபோது என் அம்மா எதிரியின் அருவாளை பறித்துக்கொண்டும் எதிரி என் அம்மாவின் தலை முடியை பிடித்து இழுத்துக்கொண்டும் இருந்தார்கள். அப்போது என் அம்மாவை கீழே தள்ளினேன். என்னை எதிரி வெட்டியபிறகு என்னை தள்ளிவிட்டு மீண்டும் என் அம்மாவை போய் வெட்டினார். நான் கீழே விழுந்த பிறகு தான் என் அக்கா மாடியிலிருந்து ஓடிவந்தார். எனது அக்காவை எதிரி ஒரு வெட்டு தான் வெட்டினார். போலிசார் விசாரணையில் என் அக்காவை எதிரி மாறி மாறி எதிரி ஓங்கி வெட்டியதால் அவருக்கு வலது கையில் காயம் என்று நான் சொல்லவில்லை. எனதுஅக்காவிற்கு எதிரி ஒரு காயத்தை தான் ஏற்படுத்தினார். என்னை போலிசார் விசாரித்தபோது எனது அக்காவிற்கு வலது கையில் ரத்தகாயமும் வலது தோள்பட்டையில் ரத்தகாயம் என்று சொல்லவில்லை. நானும் என் அம்மாவும் எதிரி வைத்திருந்த அருவாளை பிடுங்க மல்லுக்கட்டினோம் என்ற விபரத்தை போலிசாரிடம் சொல்லியுள்ளேன். எதிரியிடம் இருந்த அருவாளை என் அம்மாதான் பிடுங்கினார். அவ்வாறு என் அ ம்மா எதிரியிடமிருந்த அருவாளை பிடுங்கும்போது எதிரி அங்கிருந்த கல்லில் பட்டு காயம் ஏற்பட்டது. என் அம்மாவை வெட்டும்போது இருந்தே பிரபாகரனும், சூரவள்ளியும் சம்பயிடத்தில் இருந்தார்கள் ஆனால் அவர்கள் இருவரும் எதிரியிடமிருந்த அருவாளை பிடுங்கவோ தடுக்கவோ செய்யவில்லை. நான் காயம் பட்ட வுடன் நான் மட்டும் திருப்புவம் காவல்நிலையத்திற்கு சென்றேன். அங்கு சென்று அவர்களிடம் சம்பவத்தை சொன்னேன் ஆனால் அதை அவர்கள்

எழுதிக்கொள்ளாமல் மருத்துவமனைக்கு போங்கள் நாங்கள் வந்து விசாரித்து கொள்கிறோம் என்று சொன்னார்கள். அதன்பிறகு நான் திருப்புவனம் மருத்துவமனைக்குசென்றேன். அங்கு வைத்து என்னையும் எனது அக்காவையும்., எனது அம்மாவையும் விசாரித்தார்கள் விசாரித்ததை எழுதிக்கொண்டார்கள் அதில் எங்கள் மூவரிடம் கையொப்பம் பெற்று கொண்டார்கள். அதை நாங்கள் படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டோம். நான் சொன்னது போல் எந்த ஒரு சம்பவம் எனது அம்மா வீட்டில் நடைபெறவில்லை எ'ன்றும் அங்கு வைத்து எங்கள் மூவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தன்று எங்கள் வீட்டில் இருந்தேன் என்றும் சம்பவத்தன்று எனது அம்மா வீட்டில் இருந்ததா பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு லாரி ஓட்டுவதற்கு National permit இருந்து இந்தியா முழுவதும் லாரி ஓட்டி வந்தது எ னக் கு தெரியாது. ஆனால் அவர் டிரைவராக தான் இருந்தார். நான் கூறியது போல சம்பவத்தன்று எதிரி எனது அக்கா மகனை விரட்டி வரவில்லை என்றும் எனது அக்கா மகன் தூங்கிகொண்டிருந்த என்னிடம் விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி மதுரையில் லாரி கம்பெனியில் வேலை பார்த்துவிட்டு ஓய்விற்கு செல்லப்பனேந்தலில் உள்ள அவரின் பெற்றோர் வீட்டில் இருப்பார் என்றால் சரிதான். அவ்வாறு ஓய்விற்கு அவரது பெற்றொர் வீட்டில் எதிரி இருந்தபோது என் மகனும், எனது அக்கா மகனும் கையில் ஆளுக்கொரு கத்தியுடனும் நானும் எனது அம்மாவும் எனது அக்காவும் ஆளுக்கொரு கம்புடனும் எதிரி படுத்திருந்த வீட்டிற்குள் அத்து மீறி நுழைந்து அவரை அ டித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக எதிரி திருப்புவனம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் தெரியாது. நாங்கள் திருப்புவனம் அரசு மருத்துவமனையில் இருந்தபோது எதிரியும் வந்தார் ஆனால் உள்ளே வராமல் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். நான் சொன்னது போல்எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எனது அக்காவிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எதிரி எங்களை தாக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH
Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.05.13 10:38:11 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.